பழமொழியாகமம் 11:2

ஆங்காரம் எங்கே இருந்ததோ அங்கேயே அவமானமும்; தாழ்ச்சி எங்கேயோ அங்கே ஞானமும் (உண்டு).

பழமொழியாகமம் 8:13

தேவ பயந் தீமையைப் பகைக் கின்றது; நானும் அகந்தையையும், ஆங்காரத்தையும், தீய வழியையும். இரட்டிக்கிற மொழியையும் நாவை யும் அரோசிக்கின்றேன்.

உரோமாபுரியார் 1 12:16

ஒருவரோடொருவர் ஏக சிந்தனையுள்ளவர்களாய் இருங்கள். பெருமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களோடு ஒத்து நடங்கள். உங்களையே புத்திசாலிகளென்று எண்ணாதிருங்கள்.

அரசராகமம் 1 16:7

ஆண்டவர் சமுவேலை நோக்கி: நீ அவனுடைய முகத்தையுஞ் சரீர உயரத்தையும் பார்க்காதே; ஏனெனில், நான் அவனைத் தள்ளிவிட் டேன். மனுஷன் பார்க்கிறது ஒரு விதம், நாம் தீர்மானிக்கிறது வேறு விதம்; மனிதன் வெளிக்குத் தோன்று பவைகளைப் பார்க்கிறான்; ஆண்ட வர் இருதயத்தைப் பார்க்கிறாரென்று சொன்னார் (சங். 7:10).

கொரிந்தியர் 2 10:17-18

எப்படியிருந்தும், மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரிடத்திலே மேன்மைபாராட்டுவானாக. (எரே. 9:23; 1 கொரி. 1:31.) ஏனெனில் தன்னைத்தானே புகழுகிறவன் புகழ்ச்சிக்குரியவனல்ல. சர்வேசுரனாலே புகழப்படுகிறவனே புகழ்ச்சிக்குரியவன்.

பழமொழியாகமம் 29:23

ஆங்காரியைத் தாழ்மை பின் தொடர்கின்றது; மனத்தாழ்ச்சி யுடையோன் மகிமையை அடை வான் (யோபு. 22:29).

அருளப்பர் முதல் நிருபம் 2:16

ஏனெனில் உலகத்திலுள்ள யாவும் சரீர இச்சையும், கண்களின் இச்சையும், ஷஜீவியத்தின் அகங்காரமுமாயிருக்கின்றது. அவைகள் பிதாவினிடத்தினின்று வராமல் உலகத்தினின்றே வருகின்றது.

பழமொழியாகமம் 18:12

தாழ்வு வருமுன் மனிதன் தன் மனதில் ஆங்காரம் கொள்வான்; மகிமைப்படுத்தப்படுமுன்னே தாழ்த்தப்படுகின்றது.

அர்ச். மாற்கு சுவிசேஷம் 7:20-23

மனிதனுடைய இருதயத்திலி ருந்து புறப்படுகிறவைகளே மனிதனை அசுத்தப்படுத்துகின்றன. ஏனெனில் மனிதனுடைய இரு தயத்துக்குள்ளிருந்து துர்ச்சிந்தனை களும், விபசாரங்களும், வேசித்தனங் களும், கொலைபாதகங்களும், களவுகளும், லோபித்தனங்க ளும், துஷ்டத்தனங்களும், கபடங்களும், காமவிகாரங்களும், வன்கண்ணும், தேவ தூஷணமும், ஆங்காரமும், மதிகேடும் புறப்படுகின்ற ன. (ஆதி. 6:5.) இந்தத் தின்மைகளெல்லாம் உள்ளத்தினின்று புறப்பட்டு, மனி தனை அசுத்தப்படுத்துகின்றன என்றார்.

கொரிந்தியர் 1 1:28-29

உள்ளவைகளை அழிக்கும்படி சர்வேசுரன் உலகத்தில் இழிவானவைகளையும், நீசமானவைகளையும், இல்லாதவைகளையும் தெரிந்துகொண்டார். ஏனெனில் மாம்சமான எவனும் அவருடைய சமுகத்தில் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய் தருளினார்.

தீமோத்தேயு 1 6:17

இப்பிரபஞ்சத்தில் ஐசுவரியராய் இருக்கிறவர்கள் ஆங்கார சிந்தை யுள்ளவர்களாய் இராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வைக்காமலும், நாம் அநுபவிப்பதற்கு வேண்டிய யாவையும் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஷஜீவனுள்ள சர்வேசுரன் பேரில் நம்பிக்கையாயிருக்கவும், (லூக். 12:21.)

கொரிந்தியர் 1 13:3

அன்றியும் என் ஆஸ்திபாஸ்திகளெல்லாவற்றையும் நான் ஏழைகளுக்குப் போஷஜனமாகப் பகிர்ந்தாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கும்படி கையளித்தாலும் என்னிடத்தில் தேவசிநேக மில்லாவிட்டால், எனக்குப் பிரயோசனம் ஒன்றுமில்லை. (மத். 6:2, 3.)

தானியேல் ஆகமம் 4:37